அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 26 / 2018
தேதி : 16.02.2018

**காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு தமிழர்களுக்கு மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளித்திருக்கிறது.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் அறிக்கை.**

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புக்கு எதிரான, தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட 4 மாநிலங்கள், மேல் முறையீட்டு வழக்கில் இன்று உச்சநீதிமன்றம் அதிரடியான தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

”நதிகள் தேசியச் சொத்து” என்ற அடிப்படையில், காவிரி நீரை எந்த மாநிலமும் உரிமை கொண்டாட முடியாது என்ற தீர்ப்பு வரவேற்கத்தக்கதுதான். ஆனால் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய 192 டி.எம்.சி தண்ணீரை 177.25 டிஎம்சியாக குறைத்து, குறைக்கப்பட்ட அளவான 14.75 டிஎம்சி தண்ணீரை, கர்நாடகாவுக்குக் கூடுதலாகத் தரவேண்டும் என்ற தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

தமிழகத்தின் கோரிக்கையே, கூடுதலாக தண்ணீர் வேண்டும் என்ற நிலையில், ஏற்கெனவே தீர்ப்பான அளவுத் தண்ணீரைக் குறைத்திருப்பது, தமிழகம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதையே உணர்த்துகிறது.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழகத்திற்கு 192 டிஎம்சி அளவே நீடிக்கும் என்று தீர்ப்பு வந்திருந்தால் கூட ஓரளவு நிம்மதி அடைந்திருக்கலாம்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624





காவிரி நீர் மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு முன்னதாகவே அமைத்திருந்தால், இத்தகைய தீர்ப்புக்கு அவசியம் ஏற்பட்டிருக்காது. அரசிதழில் வெளியிடப்பட்ட காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு வெறும் அறிவிப்பாக மட்டுமே ஆகிவிட்டது. தமிழர்களுக்கு மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளிக்கும் என்பது உறுதி.

மேலும், பாஜக தலைமையிலான மத்திய அரசு, இரு மாநிலங்களுக்கிடையேயான காவிரி நதிநீர் பங்கீட்டு பிரச்சனையில், காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காமல் இருந்ததே இதற்கு முக்கிய காரணம் என்று நான் கருதுகிறேன்.

இனியும், தமிழகத்திற்கு கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல் 100 சதவிகிதப் பயன்பாடு இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நதிகளை தேசியமயமாக்கினால் மட்டுமே இப்பிரச்சனைக்கு தீர்வாக அமையும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com